போர் 1 | பொள்ளாச்சி. 26—7—51. | விலை அரையணா. | 6-பக்கம். | வெற்றி 2

விலை அதிகமுள்ள அரிசியை கட்டாயமாய் வாங்க வேண்டியதில்லை.

ரேஷனிங் ஆபீஸர் அறிக்கை.

பொள்ளாச்சி டவுன் ரேஷனிங் ஆபீஸர் ஸ்ரீ எம். நடராஜ முதலியார் அறிவிப்பதாவது தற்சமயம் டவுனிலுள்ள ரேஷன்ஷாப்புகளில் இரண்டு வித அரிசி இருக்கிறது. உயர்தர ரக அரிசி பக்கா விலை ரூ 1–5–10. சாதாரண அரிசி பக்கா விலை ரூ. 0–12–0. இதில் உயர்தர அரிசியை வாங்கித்தான் தீர வேண்டுமென்பதில்லை. கூப்பன்காரர்கள் தங்கள் இஷ்டம்போல் எந்த அரிசி வேண்டுமோ அதை வாங்கிக் கொள்ளலாம்.

செய்திகள்!

முதியோர் கல்வி.

22-ம் தேதி மாலை சுப்பேகவுண்டன்புதூரில் இருக்கும் முதியோர் கல்விப்பள்ளியை தாலூக்கா முதியோர் கல்வி காரியதரிசி ஸ்ரீ பி. எஸ். சுப்பையன் தாலூக்கா ஹரிஜன சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ சி. என். நாகப்பபிள்ளை ஆகியவர்கள் ஷை பள்ளிக்கு விஜயம் செய்து பார்வை இட்டனர். ஷை பள்ளி ஆசிரியர் மாரிமுத்து அவர்களின் சேவையைப் பாராட்டினர். பின்னர் சேரியில் ஒரு கூட்டத்தில் முதியோர்கல்வியின் அவசியம்பற்றி ஸ்ரீமான்கள் நாகப்பபிள்ளை சுப்பையன் அவர்களும் விரிவாக சொற்பொழிவாற்றினார்கள்.

ஹரிஜன ஹாஸ்டல்.

21-ம் தேதி பிற்பகல் ஸ்ரீ காந்தி ஹரிஜன ஹாஸ்டல் மாணவ சொற்பொழிவு மன்ற இரண்டாவதுஆண்டு ஆரம்பவிழா

ஸ்டாக் நிலைமை.

23-7-51 ல்.

நெல் மூட்டை	12.
பச்சரிசி மூட்டை	255
புழுங்கல் அரிசி மூட்டை	2220
குருணை மூட்டை	6
கோதுமை மூட்டை	505
சோளம் மூட்டை	933.
மாவு மூட்டை	ஒன்றரை.

வையொட்டி ஸ்ரீ எஸ். ஆறுமுகம் தேசியக்கொடி யேற்றுவித்தார். தமிழ் பண்டிதர் ஸ்ரீ சிவகுருநாதபிள்ளை அனைவரையும்வரவேற்றார் பு. கே. ஷண்முகம் செட்டியார் ஆண்டறிக்கையை வாசித்தார். ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ வி. டி. டைட்டஸ் ஷை விழாவை ஆரம்பித்து வைத்தார். கமிஷனர் ஸ்ரீ ஆர். ஜகதீசன் அவர்கள் தலைமையில் மாணவர்கள் கல்வி என்பது பற்றிப்பேசினார்கள். மேட்டுப்பாளையம் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ எஸ். துரைசாமி நாயுடு கல்வியும் ஜனநாயகமும் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார். ஸ்ரீ ஏ. கே. சுப்ரமணியம் ஆசிச்செய்திகளை வாசித்தார். ஸ்ரீ நாகப்ப பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

இளைஞர் காங்கிரஸ்.

23-ம் தேதி திங்கள் மாலை இளைஞர் காங்கிரஸ் சார்பில் ஷை அலுவலகத்தில் ஹரிஜன சேவாசங்க காரியதரிசி ஸ்ரீ சி. என். நாகப்பபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தேனியிலும் காரைக்குடியிலும் நடைபெற்ற சம்பவங்களை குறித்து இளைஞர்கள் ஏ. ராம்சாமி, கே. வெள்ளியங்கிரி, டி. ஆர். லட்சுமணன் பொ. நா. வாசுதேவன், இளங்கதிர், பை. தமிழன், காரியதரிசி அ. பாசித் ஆ யோர் பேசினார்கள். பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. தேனியில் நடைபெற்ற சம்பவத்தைக்குறித்து இக்கூட்டம் கண்டித்து வருந்துவதோடு சரியானபடி விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

2. காரைக்குடியில் நடைபெற்ற இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் இளைஞர் காங்கிரஸை சேர்ந்த மாணவர் ஒருவரை திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் தாக்கியதை இக்கூட்டம் கண்டிப்பதோடு வருந்தியும் அம்மாணவனுக்கு அனுதாபம்தெரிவித்து இதற்குத்தக்க நடவடிக்கை எடுக்க சர்க்காரைக்கேட்டுக்கொள்கிறது பின்னர் தலைவர் முடிவுரையில் இளைஞர்கள் இன்று நாட்டுக்கு செய்யவேண்டிய கடமைகளைப் பற்றி விளக்கிக் கூறினார். காரியதரிசி அ. பாசித நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

நேயர் தபால்.

சுவர்களைக் கெடுக்காதீர்கள்.

நமது நகரில் இப்போது விளம்பரம் செய்வதில் புதிய விதம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறார். அதுதான் சுத்தமான சுவர்களில் காவியால் எழுதிக்கெடுப்பது! இதை சில கட்சிக்காரர்களும் பீடி புகையிலை போன்ற வியாபாரிகள் தான் அதிகமாக செய்கிறார்கள். இது மாதிரி எழுதினால் சுவர்கெட்டு குட்டிச்சுவர் போல காட்சியளிக்கும். இதை யாரும் கவனிப்பதில்லை. இனிமேலாவது பிறர் சுவற்றில் எழுதுவதைவிடுத்து வேறுவகையில் விளம்பரம்செய்தால்நல்லது (ஆறுமுகம்.)

செல்வாக்கு மிகுந்த தமிழ் வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 26—7—51. வியாழன்.

ஸ்ரீ கித்வாயின் விதண்டாவாதம்.

தபால் தந்தி இலாகா மந்திரி ஸ்ரீ ரபி மத்கித்வாய் காங்கிரஸ் மந்திரி சபைக் ள்ளேயே இருந்து கொண்டு தான் புதி க சேர்ந்திருக்கும் அரசியல் கட்சிக்காக வலைசெய்கையில் சர்க்காரை தாக்கமாட் ர் என்றுகூறி தனக்கு குறையுள்ளகாங் ரஸ் நிர்வாகத்தை தாக்கிப் பேசுவேன். ாங்கிரசின் லட்சியம் செய்கையில் ஒருவி மும் காகிதத்தில் ஒரு விதமும் இருக்க து. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் விவகாரங் ள் சீர்பட்டாலும் தான்மீண்டும் காங்கிர ஸில் வந்துசேர மாட்டேன் என்று கூற யாராகயில்லை. ஆனால் மந்திரி சபையில் தான் ராஜீநாமா செய்துகூட மந்திரிசபை யில் தன்னை இருக்கும்படி அனுமதித்தி னால் காங்கிரஸில் ஏற்படும் மந்தநிலையை மாளிப்பது பிரதமர் நேருஜியுடையதாகி து என்றுகூறி ஸ்ரீ கித்வாயும் ஸ்ரீ அஜீத் ப்ரசாத்ஜெயினும் சேர்ந்து அறிக்கைவிடு திருக்கிறார்கள். மேலும் அந்த அறிக்கை யில் அறிவுக்குப்பொருந்தாத குற்றச்சாட் டுகளை ராஷ்டிரபதி ஸ்ரீ தாண்டன்மீது சு மத்தியிருக்கிறார்கள். பாபு புருஷோத்தம தாஸ் தாண்டன் காங்கிரஸின் எந்தக் கொள்கையையாவது கடை பிடிக்கிறாரா? பொருளாதார விஷயமாயிருந்தாலும் சரி, வகுப்புவாத விஷயமாயிருந்தாலும் சரி, சர்வதேசவிஷயமாயிருந்தாலும்சரி எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டுபா ருங்கள். ஒரு ஸ்தாபனத்தின் தலைவர் அந்த ஸ்தாபனத்தின் லட்சியங்களுக்கு நேர் மாறாக இருப்பது உலகத்தில் வேறு எங் காவது உண்டா? என்று ஒரே அடியாய் அந்த அறிக்கையில் அழுகிறார் ஸ்ரீ கித்வாய்! இந்த அறிக்கையை தன் மனசாட்சிக்கு புறம்பாகத்தான் விட்டிருக்கவேண்டும்.

ஒருவர்மீது குற்றம்சாட்டுவது என்பது விளையாட்டான காரியம் அல்லா! இதை ஸ்ரீ கித்வாய் உணராமல் தன்னை நேருஜி ராஜீநாமா செய்யவேண்டாம் மந்திரிபதவி இருக்கட்டும் என்று கூறிவிட்ட தைரியத்தில் ஒரு தலைவர்மீது காங்கிரஸின் ஒப்பிலாத தளபதி மீது குற்றம் சாட்டியிருக்கிறார். பிறரையும் காங்கிரஸ் ஸ்தாபனத்தையும் அதன் தலைவரையும் குறைகூறும் இந்த கித்வாய் இவர் காங்கிரஸ்காரராக இருந்து மந்திரி சபையில் தபால்இலாகாவில் என்ன சாதித்தார். சாதிக்கத்தான் முடிந்ததா? இல்லை! தபால் இலாகாவில் நாள் ஒரு சட்டமும் மணிக்கொரு சட்டமும் செய்து தபால் இலாகாவை தடுமாறச்செய்ததைத்தவிர வேறு என்ன இவரால்சாதிக்க முடிந்தது. தன்னைத் திருத்திக்கொள்ளமுடியாத கித்வாய் தலைவர்தாண்டன் அவர்கள் மீது குற்றம் சாட்டஎன்ன யோக்கியதை இருக்கிறது. பாபு தாண்டன்ஜி காங்கிரஸ் அக்ராசனராக வந்துகொஞ்ச காலம் தான் ஆகியிருக்கிறது. இன்று காங்கிரஸில் கித்வாய் போன்ற சுயநலமிகள் இருந்துகொண்டு ஸ்தாபனத்தின் பெயரைக்கெடுப்பதையும் காங்கிரஸ் மந்திரி சபைகள் சாதிக்க முடியாதவைகளையும் சில சிக்கலான பிரச்னைகளைத்தீர்ப்பதற்காகவே தான் இன்று அவர் தலைவராக வந்தார். அவர்மீது கித்வாய் குற்றம் சாட்டியது மிகவும் தவறு.

ஸ்ரீ கித்வாய் என்றுவதுகாங்கிரஸ் விதிகளில் ஒன்றுவது கடைப்பிடித்திருக்கிறாரா? எந்த விஷயத்திலாவது நன்மையானவைகளை மந்திரி சபையில் சாதித்திருக்கிறாரா? இதை நன்குணராமல் தனக்கு நேருஜியின் செல்வாக்கு இருக்கிறது, அதன் மறைவில் தானும் தன் வேலைகளைச் செய்யலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறார். எந்த மனிதனாக இருந்தாலும் காங்கிரஸ்தான்பெரிய ஸ்தாபனம்என்று எண்ணும்போது நேருஜி தனக்கு வேண்டியவர்களை மந்திரிசபையில்வைத்திருப்பது தவறு காங்கிரஸிற்கு எதிராகப்பிரச்சாரம் செய்யும் சுதந்திரத்துடன் இருக்க அனுமதிக்கப்பட்டால் காங்கிரஸின் கட்டுப்பாடே சீர்குலைந்துவிடும், நேருஜி கித்வாயின் ராஜீநாமாவை வாப்பஸ் பெறச்செய்தது பெறும்தவறு. இதை நேருஜி உணர்ந்து தன் மந்திரி சபையிலிருந்து, இம்மாதிரி காங்கிரஸின் விரோதிகளை வெளியேற்றுவார் எனவும், அடுத்தமாதம் 11 தேதி கூடும் காரியக்கமிட்டி இந்தப்பிரச்சனைகளைக்கவனித்து முடிவு கட்டுமென நம்புகிறோம்.

29-7-51ம் தேதி மாலை 4-30 க்கு டவுன் காங்கிரஸ் கமிட்டிக்கூட்டம் நடைபெறும்

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

யோகமும், வடக்கு திக்கு வார சூலையும், குன்று சுபநாள். மாங்கல்யம் செய்வதற்கும், எதிர்கால வாழ்க்கைக்கு பல புதிய திட்டங்களை அமுலுக்கு கொண்டுவருதற்கும், பெரியோர்களை பேட்டி காண்பதற்கும் முக்கிய நாள்: இன்று காலையில் காலை 5-மணிமுதல் 6-30 மணி வரையிலும் அதன்பிறகு 9-மணிமுதல் 9-30 மணிவரையிலும், மாலையில் 4-மணிமுதல் 4-30 மணிவரையில் சுப ஓரையில் சிறு காரியங்களை ஆரம்பிக்கவும். இன்று அதிர்ஷ்ட எண்கள். 5-8.

2-8-51 (ஆடி 17) வியாழக் கிழமை, இன்று தேய்பிறை அமாவாசை பூரானாள். முழுநாளும் பூச நட்சத்திரம். ஜீவன் நேத்திரம் பூஜ்யம். 60-நாழிகை அமிர்த யோகம் இன்று தெற்கு வார சூலை. கப்பல் பிரயாணமும், ஆகாய விமான யாத்திரையும் தெற்கு திக்கில் விலக்கவும். இன்று சிறு காரியங்களை செய்வதற்கு காலையில் 9-மணிமுதல் 10-30 மணிவரை. இன்று வசிய எண்கள் 0–8.

லக்க ஜோசியம்,

பூரா ஆயுள் பலன்சொல்ல "பொள்ளாச்சி வாசி" ஸ்பெஷல் கூப்பன்.

முழுப்பெயர்

விலாசம்

ஜாதகமிருந்தால் தனிக்காகிதத்தில் எழுதியனுப்பவும். அனுப்பும் விலாசம்.

லக்கஜோசியர், கே. பி. வாசுதேவன்,

453, ஐரோடு, சென்னை 19.

கூப்பனுடன் 14 அணாவுக்கு மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் அனுப்பவும். ஸ்டாம்புகள் அனுப்பக்கூடாது. கூப்பன் இல்லாமல் வரும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டாது.

ரேஷனிங் அட்வைசரிக்கூட்டம் 28-ம் தேதி சனி மாலை 5 மணிக்கு ரேஷனிங் ஆபீஸில் நடைபெறும் என்று ரேஷனிங் ஆபீஸர் தெரிவிக்கிறார்.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் & பிரதர்,
கடை வீதி.

மாடர்ன் கபே,
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

S. P. M. கொடி மஜீத்பீடி,
அங்கு விலாஸ் கடை,
ஏஜண்டு: A. S. B. செட்டியார்.

S. R. V. லாட்ஜிங்கில்
சுகாதார முறைப்படி நல்லகாற்றோட்ட
முள்ள ரூம்கள் வாடகைக்கு விடப்படும்.

உங்கள் அபிமானம் பெற்ற
M. குமாரவேல்த்தேவர்,
புஷ்ப வியாபாரம் கடைவீதி.

ஓர் வேண்டுகோள்.
குறைந்த வாடகையில் மின்சார விளக்குகள் ஒலிபெருக்கி, மின்சாரம் இல்லாத இடங்களில் அமைத்துக் கொடுக்கப்படும்.
M. சுப்பையகவுண்டர்,
தலைவர்,
மோட்டார் தொழிலாளர் சங்கம்,
பொள்ளாச்சி.

சுண்டியம்மன் கம்பெனி,
கோயமுத்தூர் ரோடு,
மோட்டார், ஆயில் எஞ்சின், பம்ப் செட்கள், எலக்ட்ரிக் சாமான்கள், மற்றும் மெஷினரி சாமான்களும் குறைந்த விலையில் எங்கள் கம்பெனியில் கிடைக்கும்.
உரிமையாளர்:
C. ரங்கசாமிக்கவுண்டர்.

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. யிக்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.
தலைவர்:— S. R. Chandran.

கேள்வி—பதில்.

கே: பொள்ளாச்சியில் நடந்த 6-வது அரசியல் மகாநாட்டில் திரு எஸ். எஸ். மாரிசாமி பேசுகையில் "திராவிடம்" என்றவார்த்தை சரித்திரத்தில் இல்லை என்று சொன்னரே? அது உண்மையா! ஆனல் நீங்கள் முடிசூடா மன்னன் எனப் போற்றும் ஜவகர்லால் சிறையிலிருக்கும்போது தன் புதல்வி இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் "திராவிடம்" என்று குறித்துள்ளாரே அது பொய்யா? நீங்கள் தேசிய கீதம் பாடி பரவசப்படச் செய்கிறீர்களே பாமர மக்களை அதில் வருகிறதே திராவிடம் என்ற வார்த்தை பஞ்சாப சிந்து குஜராத்த மராட்ட திராவிட உத்கல வங்க... ...... இது பொய்யா? இது எப்படி ஏன் எதற்காக வந்தது? சரியான விளக்கம் தேவை!

(நா. மாமல்லன்.)

ப: திரு எஸ். எஸ். மாரிசாமி கூறியது உண்மை! நீர் சங்ககாலத்து நூல் எதாவது படித்திருக்கிறீரு! அதில் திராவிடம் என்ற சொல் இருக்கிறதா? சரித்திரம் சரியானபடி படித்திருக்கிறீர்களா? திராவிடர் என்பவர் யார் உங்களுக்குத் தெரியுமா? உயரத்தில் குறைந்த குள்ளர்கள். கருப்பு நிறம், கருத்த சுருண்ட தலைமயிர், கருத்த முழியங்கண்கள், நீண்ட தலை, தட்டை மூக்கு, முன்னங்கை நீளம் பார்ப்பதற்கு பயங்கரத்தோற்றம் அளிப்பவர்களே திராவிடர்கள் என்று மே[...] அறிஞர் கிரீயர்சன் எழுதியுள்ளார். இ[...] நீங்கள் படித்தது உண்டா? ஐந்தாம் [...]ப்பு பாட புத்தகத்திலும்கூட இப்ப[...] தானே எழுதியிருக்கிறர்கள். மேல் [...] அறிஞர்கள் எல்லாம் அப்படித்தா[...] எழுதியிருக்கிறர்கள் இதை ஆதார[...]க்கொண்டுதானே நம்தவப்புதல்வர் [...]ஜி எழுதியிருக்கிறர். தேசியக் கீதம் அப்படித்தான்! இதை ஒருசில சுய[...]கள் மறைந்த இனத்தை இருக்[...] என்று ஏமாற்றி ஆரியம் திராவிடம[...]ந்த கலப்பு இனத்தை பிரிக்க சூழ்ச்[...]ய்து தாங்கள் திராவிடர்கள், எங்கள் திராவிடநாடு என்றெல்லாம் திருட்[...]னம் செய்து தங்கள் வயிற்றைக்[...] வருகிறர்கள். நீர் திராவிடர்கள் உ[...] என்று நம்பினல் மேலே கூறிய வி[...] மனிதராகத்தான் இருக்கவேண்டும். போதுதெரிந்ததா எப்படி ஏன் எதற்[...] வந்தது. மேலும் விளக்கம் உமக்குத் [...]வையில்லை என்று எண்ணுகிறேன்.

கே: 15-7-51 ல் நடைபெற்ற [...]னிஸ்ட் கூட்டத்தில் கோவை கோவி[...]தன் காலில் லாடம் அடித்ததாகப் [...]ஞ்ா அது உண்மையா?

(ஆர். பழனிசா[...]

ப: உண்மையா, பொய்யா என்[...]வர் பேசிய பேச்சிலிருந்து தெரிந்து[...]ள்ளவேண்டியதுதான்.

உழுதுண்டு வாழ்வானே வாழ்வான்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வர்.
(வள்ளுவர்.)

P. S. G.

● இந்தியரின் ● இந்தியரின்



மூலதனம் உழைப்பு

P. S. G. எலக்ட்ரிக் மோட்டார் பம்புகளின் முக்கிய அம்சங்கள்.
- குறைந்த செலவில் அதிக தண்ணீர்,
- நிகரற்ற சேவை,
- நீடித்த உழைப்பு,
- நிசப்தமான ஓட்டம்.

P. S. G. உற்பத்தி பொருள்களின் விநியோகஸ்தர்:—
C. N. சாமி என்ஜினியரிங் ஒர்க்ஸ்,
ராஜாமில் ரோடு, :: **பொள்ளாச்சி**

குறிப்பு:- எல்லாவிதமான ஆயில்என்ஜின்கள் எலக்ட்ரிக் மோட்டார் பம்ப் செட்டுகள் மோட்டார் ரீ வைண்டிங்குகள் குறித்த காலத்தில் ரிப்பேர் செய்துகொடுக்கப்படும்.
உரிமையாளர் — **C. நாராயணசாமி**

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

ட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

தர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர் ப்பகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

அறிவிப்பு.

உறுதிக்கும், நேர்த்தியான வேலைப்பாட்டிற்கும்
சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு

—— சிமிட்டியை ——

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு
பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை,
பழனி
ஆகிய இடங்களில் கடைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, பொள்ளாச்சி.

போன் நெம்பர். 63.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார்
& பிரதர்ஸ்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.

“லக்க ஜோசியம்”

(27-7-51 முதல் 2-8-51 வரை.)

இந்த லக்க ஜோசிய முறையில் ஒருவருடைய ஆயுள் வரையில் என்னென்ன பலன்கள் நடக்கும் என்று நிச்சயமாககூற முடியும். ஜோதிஷம், ரேகை சாஸ்திரம், ஆருடம் முதலியவைகளால் சொல்லமுடியாத சில விஷயங்களை மிகத்தெளிவாக லக்க ஜோசியரீதியாக கூறமுடியும். ஆருட விஷயத்தில் லக்கஜோசியத்தைவிட சிறந்தமுறை வேறுகிடையாது.

லக்க ஜோசியம் வியாபார விஷயமாக அதிகமாக உபயோகப்படுகிறது. பிறந்த தேதியோ நட்சத்திரமோ அல்லது ஜனன குறிப்போ தெரியாவிட்டால் உங்கள் பெயரைக்கொண்டே, பலன்கள் திடமாக சொல்லமுடியும். உதாரணமாக K. RAMAN என்ற பெயரை எடுத்துக்கொள்வோம். லக்க ஜோசியப்படி ஆங்கில எழுத்துக்குப் பின்வரும் எண்கள்கிடைக்கும்.

1	2	3	4	5	6	7	8	9
A	B	C	D	E	F	G	H	I
J	K	L	M	N	O	P	Q	R
S	T	U	V	W	X	Y	Z	

K. RAMAN

2 9 1 4 1 5, 2+9+1+4+1+5 =22, 2+2=4 இந்த நெம்பர் 4 தான் **K. RAMAN** என்கிற எண்ணிற்கு வசிய எண். நெம்பர் 4 ஐ கவனித்தால் பலன்கள் தெரியவரும். அதே மாதிரியாக ஒவ்வொருவருடைய பெயர்களை கணித ரீதியாகசெய்து பலன் பார்க்கவும். அப்படி உங்களுக்கு வசிய எண் தெரியாவிட்டால் எமக்கு எழுதவும். பூரா ஆயுள் பலன்கள் தெரியவேண்டுமானுல் லக்கஜோசிய ஸ்பெஷல் கூப்பனைப் பூர்த்தி செய்து 14-அணுவுக்கு மணியார்டர்அல்லது போஸ்டல் ஆடர் மூலமாக அனுப்பினுல் விபரமான பூரா ஆயுள் பலன் உடனே வரும்.

1 உங்கள் வசிய எண் 1 ஆக வந்தால் இவ்வாரம் திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத விதத்தில் தனலாபமும் தடைபட்ட காரியங்களில் வெற்றியும், விவகார ஜெயங்களும், தூர்தேச பந்து தரிசனமும், குடும்பஸ்தர்களுக்கு சுப காரியங்களும், பந்துமித்திரர் ஆதரவும், ரேஸ் லாட்டரி போட்டி, ஸ்பெகுலேஷன் முதலிய இனங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல பலனும் உண்டாகும், ஜுலை 27, 28 அதிர்ஷ்ட தினங்களாகும்.

2 உங்கள் வசிய எண் 2 ஆகில் இவ்வாரம் நபர்கள் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சாத்தியமானவரை பணஆசையை குறைத்துக்கொள்ளவேண்டும். அதிகமாகப்போட்டி ஸ்பெகுலேஷன் முதலியவகைகளில் அதிமாக எழுதாமல் சும்மா இருப்பதே நலம். திரேக ஆரோக்கிய விஷயமாக ஆராயும் பொருட்டு சிலருக்கு பல்வலியும் அஜீரணமும் உண்டாகும். பணக்கார முதலாளிகள் இவ்வாரத்தில் எத்தகையான வியாபாரத்திலும் பணமுதலீடு அதிகமாக செய்யாமலிருக்கவேண்டும். ஸ்திர வஸ்துக்கள், வீடு, நிலம், பூமி, வாகன முதலிய இனங்களில் ஒருவித நன்மையும் காணப்படவில்லை: ஜுலை 31 தேதியன்று அதிக ஜாக்கிரதையாக இருப்பது நலம்.

3 உங்கள் வசிய எண் 3 ஆகில் இவ்வாரம் ஒருவித நல்லபலனையும் எதிர்பார்க்க முடியாது. கெட்ட வார்த்தைகள் கேள்விப்படுதலும் தேகத்தில் வாத நோயில் பாதைப்படுதலும் திரேக சோர்வும் வழக்கமாக செய்யும் வேலைகளில் கூட மனம் ஈடுபடாமையும் வீட்டில் குடும்ப அசௌகரியமும் எவ்வளவு கஷ்டப்பட்டுஉழைத்தும்கெட்டபெயர் வாங்குவதும் கூட்டு வியாபாரிகளுக்கு மனக்கிலேசமும் போட்டி ரேஸ், ஸ்பெகுலேஷன் முதலிய இனங்களில் அதிகமாக ஈடுபடாமல் முன்ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

4 உங்கள் வசிய எண் 4 ஆனுல் இவ்வாரம் அனுகூலமாக இருந்தபோதிலும், சிலவிஷயங்கள் முக்கியமாக கவனிக்கத்தக்கவை திரேக ஆரோக்கிய விஷயமாக பித்தத்தால் கஷ்டமும், அசதியும், மந்த புத்தியும், பந்துமித்திரர்களுடன் சண்டையும், சஞ்சரவும் மனக் கிலேசமும், தாழ்ந்தவர்களுடன் கலக்கமும், வியாபாரிகளுக்கு இவ்வாரமத்திய பகுதியிலிருந்து நன்முக இருக்கும் பொன் வெள்ளி பஞ்சு இவைசம்பந்தமான வியாபாரிகளுக்கு விலைவாசிகளின் ஏற்றத்தால் நற்பலனும், தொழிலாளர்களுக்கு திங்கட்கிழமையன்று நங்க நாளாகயிருக்கும். மாணவர்களுக்கு இவ்வாரம் உல்லாசமாக காலம் கழித்தாலும் திரேக ஆரோக்கிய விஷயமாக கவனித்தல்வேண்டும்:

5 உங்கள் வசிய எண் 5 ஆனுல் இவ்வாரம் வாழ்க்கையில் பல அம்சங்களில்முன்னேற்றமடையவதற்குறிய பலவெற்றிகரமான அடையாளங்களும் குடும்பஸ்தர்களுக்கு ... சந்தானம் உண்டாகுதலும் விவாகப ... வர்களுக்கு சந்தோஷகரமான செய் ... கிடைப்பதும் அளவில்லாத மகிழ்ச்சியு ... கலகலப்பான சம்பாஷணைகளும் சில ந ... வெளியூர் பிரயாணங்கள் ஏற்படுவது ... வியாபாரிகளுக்கு நூதன வஸ்துவி ... மூலம் தனப்பிராப்தியும் உத்தி ... தர்களுக்கு வழக்கமாக செய்யும் காரி ... களில் திருப்திகரமான ... ரேஸ் லாட்டரி முதலியஇனங்களை ... ழிலாக நடத்துவோர்களுக்கு நல்ல பல ... ண்டாகும்.

6 உங்கள் வசிய எண் 6 ஆன ... யால் இவ்வாரம் அலைச்ச ... கஷ்டம், நீசர் தொல்லை, ... தனை கடன்காரர்கள் உபத்திரவம் உ ... யோகஸ்தர்களுக்கு இவ்வாரம் மனக்க ... கமும் எதிலும் ஜாக்கிரதையாக இருக் ... வேண்டும். வியாபாரிகளுக்கு இவ்வார ... விலைவாசிகளின் விலை திடீரென்று குறை ... வதால் அதிகமாக ஸ்டாக் செய்ததின் ... லம் நஷ்டமுண்டாகலாம். ஸ்திரீசொத் ... முதலிய விஷயங்களை ஆராயும் பொரு ... டு இவ்வாரம் அவ்வளவு சுகமாய் இல்ல ... ததால் சும்மா இருப்பதே நலம். குடும் ... ஸ்தர்களுக்கு இவ்வாரத்தில் ஒரு முதி ... ந்த ஸ்திரீயால் மனக்கலக்கம் உண்டாகு ... வயது முதிர்ந்த கிழவர் ஒருவரின் ம ... ணம் சம்பவிக்கலாம். (சிலருக்கு)

7 உங்கள் வசிய எண் 7 ஆன ... இவ்வாரம் சென்ற வாரங்களை ... விட திருப்திகரமாக இருக்கு ... வழக்கமாக செய்துவரும் காரியங்களி ... அபிவிருத்தியும் பந்துமித்திரர்களின் ஆ ... ரவும் குடும்பஸ்தர்களுக்கு வீட்டில் சுப ... ரியங்கள் நடப்பதும் வியாபாரிகளுக்கு ... சன்சு முதலியவற்றில் அனுகூலமானப ... லும் தொழிலாளர்களுக்கு இவ்வாரத்தி ... தம் மேலதிகாரிகளிடமிருந்து நல்ல ... வல்கிடைப்பதும் விவசாயிகளுக்கு நல் ... செய்திகளும் மாணவ மாணவிகளுக் ... இவ்வாரம் குதூகலமாக இருக்கும்.

8 உங்கள் வசியஎண் 8 ஆன ... இவ்வாரம் குடும்பஸ்தர்களுக் ... எதிர் பாராத விதத்தில் பண ... சிலவும் பந்துஜனங்கள் முன்னறிவிப்பி ... றி திடீரென்று வருவதும் உஷ்ண சம் ... தமான வியாதியால் உபாதைப்படுவது ... அதிக கஷ்டப்பட்டும் கெட்டபெய ...

(அடுத்த பக்கம் பார்க்க.)

டைப்பதும் கடிதமூலம் சஞ்சலமும், பணம் நெருக்கடியும், கூட்டு வியாபாரிகளுக்கு மனஞ்சலமும், உத்தியோகஸ்தர்களுக்கு வழக்காக செய்துவரும் காரியங்கள் மட்டும் சுமாராக நடைபெறும்.

9 உங்கள் ேியெ எண் 9ஆனல் இவ்வாரம் பொதுவாய் சுபமும், அசுபமும் கலந்தவாறிருக்கும். வியாபாரிகளுக்கு இவ்வாரம் முதல் இரண்டு தினங்கள் பணம் நெருக்கடி அதிகப்படி இருந்தாலும் பின்பு நண்பர்களின் சகாயமும், குடும்பஸ்தாகளுக்கு இவ்வாரம் மத்திபமாயும், உத்தியோகஸ்தர்களுக்கு இவ்வாரக் கடைசி பாகத்தில் வேலையில் அவ்வளவு சிரமமாயிராது. மாணவ மாணவிகளுக்கு இவ்வாரம் அவ்வளவு சுபகரமாகயிராது. தொழிலாளர்களுக்கும் இவ்வாரம்மத்திபம்.

"லக்க ஜோசியம்"

தினக்குறிப்பு.

(K. B. V.)

27-7-51 (ஆடி 11) வெள்ளிக் கிழமை. இன்று தேய்பிறை நவமி பகல் மணி 2 18 வரையும், பரணி நட்சத்திரமும் 11 12 ஏ.எம் வரையிலும், அதன் பிறகு கிருத்திகை நட்சத்திரமும், ஜீவன் நேத்திரமுள்ள நாளும், பூரு நாள் சித்தயோகமும் மேற்குத்திக்கு வாரசூலை, இன்று ஆடி கிருத்திகையும், விரதம் அனுஷ்டித்தால் பலனுண்டு. இன்று ஆகாய விமான யாத்திரைகளை முக்கியமாக விலக்கவும். இன்று வசிய எண்கள் 0, 6. இன்று உகந்த நேரம் காலை 6 முதல் 7-30 மணிவரையிலும், அதற்குப்பிறகுமாலையில் 5முதல் 5-30 மணிவரைக்கும் சிறந்தகாலம்.

28-7-51 [ஆடி 12] சனிக்கிழமை.இன்று தேய்பிறை ...மி மாலை 4 51 மணிவரையிலும், கிருத்திகை நட்சத்திரம்பகல் 1 47மணி வரையிலும், அதன் பிறகு ரோகணி நட்சத்திரமும், ஜீவன் நேத்திரமுள்ள நாளும், முழு நாளும் அமிர்தயோகமும். இன்று வாரசூலை கிழக்கு. வசிய எண்கள் 2, 3.

29-7-51 (ஆடி 13) ஞாயிற்றுக் கிழமை. இன்று தேய்பிறை ஏகாதசி இரவுமணி 7-10 வரைக்கும், ரோகிணி நட்சத்திரம் மாலை4-40 வரைக்கிம், அதன் பிறகு மிருக சீரிடம் நட்சத்திரம் ஜீவன் நேத்திரமுள்ள நாளும் பூரு நாள் சித்தயோகமும், மேற்குத் திக்கு வாரசூலையும், வசிய எண்கள் 3, 9, 10.

30-7-51 (ஆடி 14) திங்கட்கிழமை, இன்று தேய்பிறை துவாதசி இரவு 9-35 மணிவரையிலும், மிருகசீரிட நட்சத்திரம் இரவு 7-37 மணிவரையிலும், அதன் பிறகு திருவாதிரை நட்சத்திரமும், நேத்திரம் பூஜ்யமும், ஜீவன் அரையும், பூரா நாள் அமிர்த்த சித்த யோகமுள்ள நாள். இன்று வடமேற்கு பிரயாணங்களை கண்டிப்பாக விலக்கவும். சிறிய காரியங்களை ஆரம்பிப்பதற்கு காலை 5-30 மணிக்குள்ளாகவும், மாலையில் 3-மணியிலிருந்து 3-30 மணிக்குள் செய்யவும். இன்று வசிய எண்கள் 4-10.

31-7-51 (ஆடி) செவ்வாய்க் கிழமை இன்று தேய்பிறை திரயோதசி; இரவு 11-57 மணி வரையிலும், திருவாதிரை நட்சத்திரம் இரவு 10-34 மணி வரையிலும், ஜீவன் பாதியும், நேத்திரம் பாதியும், இரவு 10-48 மணிவரையில் மரண யோகமும், இன்று பிரதோஷமும், வடக்குவாரசூலை. இன்று தெய்வீக பிராத்தனை நாள். இன்று காலை 9-30 மணிக்குள்ளும், மாலை 4-30 மணி. பிறகு 4-45 மணிவரை சிறு காரியங்களை செய்யலாம். இன்று வசிய எண்கள் 4 ம் 8 ம்.

1-8-51 (ஆடி 16) புதன் கிழமை இன்று தேய்பிறை சதுர்த்தசி இரவு 2-09 மணிவரையிலும், புனர்பூசம் நட்சத்திரம் இரவு 1-27 மணிவரையிலும், ஜீவன் நேத்திரம் பூஜ்யமும், பூரா நாள் சித்த

(2-ம் பக்கம் பார்க்க.)

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:

P. A. ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்ட்:

A. K. யாகூப் சாயபு,

பொள்ளாச்சி,

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

Edited & Published by P. S. Veluswamy. Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.